# குரு சேவை

## சாந்திப்பிரியா



தீபிகா, பப்ரீத்தி என்ற சிஷ்யர்களும்
குரு பைலா முன் நின்றனர்

குரு சேவை என்பது என்ன? அதை விளக்கும் கதை இது.

ஒருமுறை கோதாவரி நதிக் கரைக்கு அருகில் இருந்த ஒரு பர்ணசாலையில் பைலா என்ற முனிவரின் மகனான வேததர்மா என்பவர் இருந்தார். அவரிடம் பல முனிவர்களின் பிள்ளைகள் வேத பாடங்கள் படித்து வந்தனர். அதில் தீபிகா, பப்ரீத்தி என்ற சிஷ்யர்கள் இருந்தனர். ஒரு நாள் அவர்கள் இருவரையும் அழைத்து குரு கூறினார். ''குழந்தைகளே நான் கடந்த பல வருடங்களாக செய்திருந்த பாபத்தினால் கர்மவினை தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. நான் காசி ஷேத்திரத்திற்கு சென்று என் பாபங்களைத் தொலைக்க எண்ணியுள்ளேன். புராணங்களும் ஒருவனுடைய பாபங்களைக்

களைய வேண்டும் எனில் வாரணாசிக்குச் செல்ல வேண்டும் என்றே கூறுகின்றன. கங்கையில் குளித்தப் பின் விஷ்வேஸவ்ரரை தரிசித்தால் மட்டுமே ஆசைகள் விலகுமாம். ஆகவே உங்களில் எவராவது என்னை உடனடியாக அங்கே அழைத்துச் செல்ல முடியுமா? குரு சேவையே சிறந்த சேவை என்பதை அறிந்திருந்த தீபகா தான் அவருடன் செல்ல சம்மதித்தான்.

குரு வேததர்மா கூறினார் ‘நான் இருபத்தி ஒரு வருடம் கடுமையான வெண்குஷ்ட நோயினால் அவதிப்பட வேண்டும் என்ற விதி இருக்கின்றது. அந்த சமயத்தில் நீ எனக்கு உதவி செய்ய சங்கடப்பட்டு என்னிடம் இருந்து விலகி இருந்தாலும் நான் அதை தவறாக நினைக்க மாட்டேன்’. அதைக் கேட்ட தீபிகா கேட்டான். “குருதேவா அந்த கொடுமையான வியாதி எப்படிப்பட்ட வேதனையை உடலுக்கும் மனதுக்கும் ஏற்படுத்தும் என்பது எனக்குத் தெரியும். ஆகவே நீங்கள் செய்திருக்கும் பாபத்தினால் உங்களுக்கு வர இருக்கும் அந்த வியாதியை எனக்குக் கொடுத்தால் கூட அதை உங்களுக்காக நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.”

வேததர்மா கூறினார் “தீபிகா, நம்முடைய பாபங்களுக்கு நாம் பொறுப்பேற்றே ஆக வேண்டும். அதை கொடுக்க முடியாது மட்டும் அல்ல விதியில் வழியும் இல்லை. ஆகவே எனக்கு உதவியாக என்னுடனேயே தங்கி இருப்பதை விரும்பினால் உன் உதவியுடன் என்னுடைய பாபங்களைத் தோலைத்துவிட்டு முக்தி அடைய வழி செய்கிறேன்.’

தீபிகா சற்றும் தயங்காமல் வேததர்மாவை அழைத்துக் கொண்டு காசியை அடைந்ததும், அவர் அங்கு கங்கைக் கரையில் குளித்தப் பின் காசி விஸ்வநாதரை வணங்கி விட்டு தன் பாபங்களைத் தொலைத்தக் கொள்ள தனக்கு குஷ்ட ரோகத்தை வரவழித்துக் கொண்டார். அதன் விளைவாக விரைவிலேயே அவருக்குக் கண் பார்வை மறைந்துப் போனது. உடம்பெல்லாம் சீர்பிடித்து கொப்பளங்கள் ஏற்பட்டு அதில் இருந்து இரத்தமும் சீழும் வெளி வந்து அவரை பெரும் அவதிக்கு உள்ளாக்கியது.



அந்த அவஸ்தையைத் தாங்க முடியாமல் கத்திக் கொண்டு ஆர்பாட்டம் செய்தார். அப்படி இருந்த நிலையிலும் தீபிகா வேததர்மாவிற்கு முகம் கோணாமல் தொடர்ந்து சேவை செய்து வீடு வீடாகச் சேன்று பிட்சை எடுத்து அதில் கிடைத்த உணவில் மீதி இருந்தால் மட்டுமே தான் உணவை உண்டு வந்தான். பல கஷ்டங்களையும் பொறுத்துக் கோண்டு சேவை செய்து வந்த அவனைத் திட்டிக் கோண்டும் குறைக் கூறிக் கோண்டும் இருந்தாலும் வேததர்மாவிற்கு தீபிகா செய்து வந்த பணி விடைகளில் எந்த குறைவையும் வைக்கவில்லை.

நோயின் கடுமையினால்  வலி பொறுக்க முடியாமல் கத்துவார். ஒரு நாள் ஏன் இத்தனை சாப்பாடு தருகின்றாய் என்று கேட்பார். மற்றோரு நாள் இந்த சாப்பாடு போதவில்லை என்பார். இன்னும் ஒரு நாள் இந்த உணவு சகிக்கவில்லை, எனக்கு இப்படி வேண்டும் அப்படி வேண்டும் என்று பல்வேறு விதங்களில் தன் சிஷ்யனைக் கொடுமைப் படுத்தினாலும் அவன் மீது காறி உமிர்ந்து சொல்லக் கூடாத வார்த்தைகளைக் கூறி திட்டினாலும் பொறுமையுடன் அவருக்கு குரு சேவை செய்து வந்தான் தீபிகா.  குருவிற்கு எப்படி தனன்னலம் இன்றி ஒரு சிஷ்யன் பணிவிடை செய்கின்றான் என்று பார்த்துக் கொண்டு இருந்த காசி விஸ்வநாதர் மனம் மகிழ்ந்து அவன் முன் தோன்றி ‘‘ உன் சேவையைக் கண்டு நான் மனம் மகிழ்ந்து போனேன்.  உன் மன வலிமையைப் பாராட்டுகின்றேன். உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள்‘‘ என்று கேட்க தீபிகா ‘‘ தேவா, என்னுடைய குருவின் அனுமதி இன்றி எந்த வரத்தையும் நான் கேட்டுப் பெறக் கூடாது. ஆகவே அவரிடம் சென்று என்ன வேண்டும் என்று கேட்டுக் கோண்டு வருகின்றேன் என்று கூறிய பின் தன் குருவிடம் சென்று காசி விஸ்வநாதர் காட்சி தந்த விவரத்தைக் கூற குரு கத்தினார் ‘‘எனக்கு சேவகம் புரிய உனக்கு விருப்பம் இல்லை என்று நினைக்கின்றேன். அதனால்தான் இப்படிக் கேட்கின்றாய். நான் இந்த ஜென்மத்துடன் என் பாபங்களை ஒழிக்கா விட்டால் அடுத்த ஜென்மத்திலும் அது தொடரும். நான் இந்த ஜென்மத்திலேயே அனைத்துப் பாபங்களுக்கும் உண்டான தண்டனைகளை அனுபவித்து விட்டு செல்ல முடிவு செய்து விட்டேன். உன்னால் முடிந்தால் எனக்கு சேவகம் செய், இல்லை என்றால் நீ விலகிப் போகலாம். ‘‘ அதைக் கேட்ட தீபிகா எந்த பதிலும் கூறவில்லை. காசி விஸ்வநாதரிடம் சென்று தனக்கு எந்த வரமும் தற்பொழுது தேவை இல்லை எனவும், தன் குருநாதர் எப்போது அனுமதி தருகின்றாரோ, அப்போது

வந்து வரம் கேட்பதாகக் கூறிவிட்டு தன் குருநாதரின் பணிவிடையில் மீண்டும் முழுகினான்.

சிவன் கூறிய செய்தியைக் கேடடு திகைப்படைந்த விஷ்ணுவும் அவன் முன் தோன்றி பல விதங்களிலும் அவன் மனதை மாற்ற நினைத்தும் தீபிகா தனக்கு எப்போதும் குருவிற்கு பணி செய்யும் பாக்கியத்தை மட்டும் தந்தால் போதும் என்று கூறி விட்டான். அவர் திரும்பிச் சென்று விட்டதும் குருவிடம் சென்ற தீபிகாவிடம் குரு பகவான் ஹரி வந்து என்ன கூறி விட்டுச் சென்றார், உனக்கு என்ன வரம் தந்தார் எனக் கேட்க, தீபிகா நடந்த விவரம் அனைத்தையும் கூறினான். அதைக் கேட்டதும் அவனுடைய குரு மனம் மகிர்ந்து அவனை ஆசிர்வதித்தார் 'நீயே என்னுடைய உண்மையான சிஷ்யன். எத்தனை விதமான தொந்தரவு கொடுத்தும் நீ என்னை விட்டு விலகிப் போகவில்லை. பகவான் உன்முன் தோன்றி உன் மனதை மாற்ற முயன்றும் நீ என் பணிவிடையில் சற்றும் மாற்றத்தைக் காட்டவில்லை. எனக்கு உண்மையுடன் இருந்தாய். நீயே ஒரு குருவுடைய உண்மையான சீடன். குரு சேவை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தாய். இனி உனக்கு எந்த விதமான துயரங்களும் இருக்காது. இனி நீ உன்னுடைய வாழ்வில் பெரும் புகழ் பெறுவாய். நீ காசியிலே தங்கி விடு. சித்தர்களும் யோகிகளும் வந்து உன்னை வணங்குவார்கள்'. இப்படிக் கூறிய பின் பாபங்களைத் தொலைத்து விட்ட வேததர்மா தன் உடலை விட்டு வெளியேறி தேவதைப் போன்ற உருவில் தீபிகாவிற்கு காட்சி தந்து அவனை ஆசிர்வதித்தப் பின் மறைந்து போனார்.